இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு! இதை நானாக விரும்பிச் செய்தால் எனக்குக் கைம்மாறு உண்டு. நானாக விரும்பாவிட்டாலும் இது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாக இருக்கிறது. அப்படியானால், எனக்குக் கைம்மாறு என்ன? உங்களுக்கு எச்செலவுமின்றி நற்செய்தியை அறிவிப்பதிலுள்ள மனநிறைவே அக்கைம்மாறு; நான் நற்செய்தி அறிவிப்போருக்குரிய உரிமையைக் கொஞ்சம் கூடப் பயன்படுத்திக்கொள்ளவில்லை” *(1 கொரி **9: 16-19**)*

# திரு இசையின் மகத்துவம் காக்கப்பட வேண்டும்!

## திருத்தந்தை வலியுறுத்து

**வத்திக்கான்:** உலகெங்கிலும் உள்ள பாடற்குழுவினர் கடந்த மாத இறுதி சனிக்கிழமையன்று வத்திக்கானில் நடைபெற்ற 3வது அகில உலக பாடற்குழுக்களின், பாடகர்களின் கூட்டமொன்றில் பங்கேற்றனர். இங்குள்ள புனித ஆறாம் பவுல் மண்டபத்தில் மேற்கண்ட கூட்டம் நடைபெற்ற வேளையில், ‘நீங்கள் வத்திக்கானை எழுப்பினீர்கள்!" என்ற மகிழ்ச்சியான வார்த்தைகளுடன் பாடகர் குழுக்களை திருத்தந்தை வரவேற்றார்.

அவரது உரையில் “உங்கள் இசையும் பாடலும், மக்களின் இதயங்களைத் தொடும் அளவிற்கும், உங்களுடைய சாட்சிய வாழ்விற்கும், திருச்சடங்குகளைக் கொண்டாடுவதற்கும் உங்கள் பணி அளப்பரிய பங்காற்றுகிறது என்றதோடு, நற்செய்தி பரப்பிற்கும் உங்கள் பங்கு பெரிது என்றார்.

சுமார் 7,000 இசைக்கலைஞர்களும் பாடகர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய முறையில் நற்செய்தி பரப்புதல் என்பதற்கான வத்திக்கானின் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடந்தேறிய இக்கூட்டத்தில், திருஅவை சமூகத்தின் இதயத்தில் இருக்கும் உணர்வுகளைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று பாடகர்களைத் திருத்தந்தை கேட்டுக்கொண்டார். அதே வேளையில் "இசையும் பாடலும் ஒரு நபரின் வாழ்க்கையில் சில தருணங்களை தனித்துவமாக்குகின்றன என்றும் அவர் கருத்துரைத்தார்.

தொடர்ந்து, அவரது உரையில், திருத்தந்தை பிரான்சிஸ் பாடகர்களை எச்சரிக்கவும் செய்தார். அவர்களின் திறமையை வெளிப்படுத்தும் நோக்கத்தில் இறைமக்களின் குரலை விட பாடற்குழுவினரின்



*3வது அகில உலக பாடகர்களின் கூட்டத்தில் திருத்தந்தை உரையாற்றுகிறார்*

குரலும் இசையும் மேலோங்கியதாக ஒருபோதும் வெளிப்படக்கூடாது என்றார். இறை மக்களின் பங்கேற்புக்கு உதவியாகவே பாடற்குழவின் பணி ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றதோடு, திருப்பலியில் பங்கேற்கும் இறைமக்களை இசையிலும் பாடலிலும் வழிநடத்தும் பணியாளர்களாக செயல்பட வேண்டுமே யொழிய, அவர்களின் இடத்தை நீங்கள் பறித்தக்கொள்ளாதீர்கள் என்று மேலும் அறிவுறுத்தினார்.

அடுத்து, ஒற்றுமையை மேம்படுத்தும் ஒன்றாக இசை பயன்பட வேண்டும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

"இன்றைய உலகில் நற்செய்தியைத் திறம்பட ஊக்குவிக்க இசை உதவும். இறைமக்களை இன்னும் கவர்ந்திழுக்கவும் திருவழிபாட்டில் பங்கேற்கச் செய்யவும் தந்தையாம் கடவுளுக்கு உரிய மக்களாக உருமாற்றவும் திருவழிபாட்டில் இசையின் பணி இன்றியமையாதது என்றார்.

உலகெங்கிலும் உள்ள பாடற் குழுவினர்களைத் திருத்தந்தை பிரான்சிஸ், இசையிலும் பாடுவதிலும் திருஅவையின் அதாவது இறைமக்களின் பங்கைப் புறக்கணிக்காமல், திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களின் போது அவர்களின் பங்கேற்பை ஊக்குவிக்க வேண்டும் என்று அழைப்புவிடுத்தார்.

நிறைவாக, திருவழிபாட்டில் இறைவேண்டல்களை ஊக்குவிக்கும் வகையிலும் திருஇசை தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் பங்கேற்பாளர்களை அவர் கேட்டுக்கொண்டார். இசையானது மனிதரை கடவுளோடு பிணைக்கின்ற ஒரு தெய்வீகக் கலை. மேலும் அது கடவுளுக்கு ஏற்புடைய கலை என்றால் மிகையாகாது. எனவேதான் நமது திருவழிபாடும் திருஇசையோடு கொண்டாடப்படும் போது அது தனிச் சிறப்படைகிறது. திருஇசை திருவழிபாட்டில் பக்தி உணர்வைத் தூண்டி எழுப்புகிறது. இறைமக்களின் உள்ளங்களை வான் நோக்கி எழச் செய்கிறது. அனைவரது உள்ளங்களையும் ஒன்றிணைக்கும் கருவியாகப் பயன்படுகிறது. அத்தோடு, திருச்சடங்குகளுக்கு ஆடம்பரம் ஊட்டுகிறது என்பதை நினைவில் கொள்வோம் என்று நினைவூட்டினார்.

இசைக்கருவிகளைப் பொருத்தமட்டில் இறைமக்கள் பாடுவதற்கு அவை உதவியாக இருக்க வேண்டுமேயொழிய, பாடுகின்ற வார்த்தைகள் கேட்க முடியாத அளவுக்கு அதிகமான ஓசையுடன் இசைக்கக் கூடாது என்பதையும் பாடற்குழுக்கள் நினைவில் கொள்ள வேண்டியது அவசிமாகும் என்ற அறிவுறுத்தினார்.

## ‘இறைவார்த்தையே இனிய பொங்கல்’ காஜாங், திருக்குடும்ப ஆலயத்தில் இறைவார்த்தை ஞாயிறும் பொங்கல் கொண்டாட்டமும்

காஜாங்: இறைவார்த்தையே இனியப் பொங்கல் என்ற தலைப்போடு, காஜாங் திருக்குடும்ப ஆலயத்தில் இறைவார்த்தை ஞாயிறு, பொங்கல் விழாவோடு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொதுக்காலத்தின் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையில் (21.01.24) இறைவார்த்தை ஞாயிறு கொண்டாடத்திற்கு, இப்பங்கின் திருவிவிலியப் பணிக்குழு, பொங்கல் ஏற்பாட்டுக் குழுவோடு சேர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்று நடத்தியது.

திருவிவிலிய வரலாற்றை எடுத்துக்காட்டும் விவிலியக் கண்காட்சி, சனி ஞாயிறு ஆகிய இரு நாள்களில் நடத்தப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பலதரப்பட்ட விவிலிய வரலாற்றுப் படைப்புகளும், ஓவிங்களும், புத்தகங்ளும் காட்சிக்கு வைக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு மக்களின் மற்றும் பங்கு அருள்பணியாளர்களின் ஆதரவும் வருகையும் வரவேற்கத்தக்கதாக இருந்தது.

திருப்பலிக்குப் பின் நடைபெற்ற வழக்கமான பொங்கல் விளையாட்டுப் போட்டிகளோடு, விவிலியப் புதிர் போட்டியும், சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டியும் நடத்தப்பட்டது. புதிர்போட்டியில் எல்லாக் கேள்விகளுக்கும் மக்கள் முந்தியடித்துக் கொண்டு பதில் அளித்தது, இறைவார்த்தை மீது அவர்கள் கொண்டிருக்கும்



விவிலியக் கண்காட்சியின் ஒரு பகுதி

வேட்கையையும் ஆர்வத்தையும் புலப்படுத்தியது என்றால் மிகையாகாது.

நான்கு தலைப்புகளில் கட்டுரை எழுதும் போட்டியில் கலந்து கொண்ட அனைவரின் முயற்சியைப் பாராட்டி ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறப்பாக எழுதிய மூவருக்குப் பணமுடிப்புகள் வழங்கப்பட்டன.

*தொடர்ச்சி அடுத்துப்பக்க்ம்....*

# புனித லூர்து அன்னை பங்கில் பாரம்பரிய பொங்கல் விழா கொண்டாட்டம்

**ஈப்போ:** புனித லூர்து அன்னை தேவாலய தமிழ் கலாச்சாரக் குழுவினரால் கடந்த ஞாயிறுக்கிழமை 21.1.2024 தேதி பிற்பகல் 2.00 முதல் மாலை மணி 6.00 வரை பாரம்பரிய பொங்கல் விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் சிறியோர் முதல் முதியோர் வரை தமிழர் பண்பாட்டு முறைப்படி பாரம்பரிய உடையணிந்து இந்நிகழ்வுக்கு மெருகூட்டினர். இப்பொங்கல் விழா இறை வணக்கப் பாடலாக 'செந்தமிழில் உந்தன் புகழ் எழுதி' என்ற பாடலோடும் பங்குதந்தை அருட்பணி ரோபர்ட் டேனியல் அவர்களின் இறையாசியுரையோடு தொடக்கி வைக்கப்பட்டது.

இப்பொங்கல் விழாவில் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் பொங்கல் வைக்கும் போட்டி குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தனித்தத் தாய்மார்களின் கிராமிய நடனம், தமிழர் தற்காப்பு கலையான சிலம்பாட்டம், உறி அடித்தல் போட்டி, கயிறு இழுத்தல் மற்றும் சிறார்களுக்கான பலூன் உடைத்தல், மிட்டாய் சேகரித்தல் போன்ற பல்வகையான போட்டிகளில் சிறியோர் முதல் பெரியோர் வரை மிக ஆர்வத்தோடு பங்கேற்றனர்.

இதில் தமிழர்களின் வாழ்வோடு வளர்ந்து வரும் பொங்கல் என்ற தலைப்பில் எங்கள் பங்கை சார்ந்த மற்றும் நாடறிந்த எழுத்தாளருமான மதிப்பிற்குரிய அன்னக்கிளி இராசையா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் தமதுரையில் வேதாகமத்தில் தொடக்க நூலில் ஆதாம் ஏவாளின் பிள்ளைகளான காயின், ஆபேல் கடவுளுக்கு தங்களின் முதல் விளைச்சலை



காணிக்கையாக ஒப்புக்கொடுத்ததை விவரித்தார்.

இவ்வாண்டு இந்த விழா இன பேதம் இன்றி ஒற்றுமை உணர்வோடும், அனைத்து சமயத் தலைவர்கள் கலந்துக் கொண்ட நிலையில் கொண்டாடப்பட்டது. மேலும், பங்கு தந்தை அருட்பணி ரோபர்ட் டேனியல் அவர்களின் பேராதரவால் இப்பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது என தமிழ் கலாச்சாரக் குழுத் தலைவர் திரு. கிறிஸ்தோபர் கூறினார். மற்றும் அயராது உழைத்த தம் குழு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

*திருமதி குளோரியா மெத்யூஸ், ஈப்போ*

*முதல் பக்கத் தொடர்ச்சி*



*பாங்கி நாடாளுமன்ற உறுப்பினருடன் தமிழ் திருத்தூதுப்பணிகுழு தலைவர் திரு பூவன்*

விவிலியக் கதாப்பாத்திர மாறுவேடப் போட்டியும் பலர் முன்வந்து கலந்து கொண்டனர். அவர்களின் விவிலிய மற்றும் கலை ஆர்வத்தையும் போற்றும் வகையில் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு ஏற்பாட்டு குழுவினரின் அழைப்பை ஏற்று பாங்கி நாடாளுமன்ற உறுப்பினர் Syahredzan Johan அவர்கள் கலந்துச் சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாக் கொண்டாட்டத்தில் ஏறக்குறைய 600 பேர் இறைவார்த்தை மற்றும் பொங்கல் விழாவில் பங்கு கொண்டனர். இறுதியில் வழங்கப்பட்ட விருந்து உபசரிப்பிலும் கலந்து சிறப்பித்தனர்.

*-அந்தோணி இன்னாசி, சைபர் ஜெயா*

# உலகின் சமயங்கள், நம்பிக்கைகளுக்கு இடையிலான நல்லிணக்க வாரம்

உலக சமய நல்லிணக்க வாரம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி முதல் வாரத்தில் பிப்ரவரி 1 முதல் 7 வரை அனுசரிக்கப்படுகிறது. இந்த அனுசரிப்பானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் (UNGA) தீர்மானத்தில் உருவனதாகும். அகில உலக சமய நல்லிணக்க வாரம் 2010 ஆம் ஆண்டு யோர்தானின் இரண்டாம் மன்னர் மற்றும் இளவரசர் காஜி பின் முஹம்மது ஆகியோரால் முன்மொழியப் பட்டு 2021 முதல் அமலாக்கம் கண்டது. ஒரு வார கால கொண்டாட்டத்தின் குறிக்கோள், உலக குடிமக்களிடையே அவர்களின் நம்பிக்கையை மட்டும் பொருட்படுத்தாமல் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதாகும். இது வேற்றுமையில் ஒற்றுமை மற்றும் மக்களுக்கும் அவர்களின் நம்பிக்கைக்கும் இடையே உள்ள




தெய்வீக தொடர்பின் கொண்டாட்டமாகவும் ஏற்படுத்துப்பட்டது.

# திருஇருதய ஆண்டவர் பங்கில் மறைக்கல்வி விழா கொண்டாடப்பட்டது

கூலிம்: கடந்த வெள்ளிக் கிழமை தமிழ் மறைக் கல்வியில் காலை 9.30 ஆரம்ப இறைவேண்டலுடன் பொங்கல் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. ஆரம்ப வகுப்பு மாணவர்கள் 1-6வகுப்பு மாணவர்களுக்கு வர்ணம்தீட்டுதலும், இடைநிலை வெற்றிபெற்றவர்களுக்கு பங்குத் தந்தை பேரருட் ஹென்றி ராஜூ அவர்கள் பரிசுகளை எடுத்து வழங்கினார். அத்துடன் இவ்வருடத்தின் முதல் மறைக்கல்வி திருப்பலியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டத்தில் சபாவை சேர்ந்த



படிவங்கள் 1-3 வரைநிலான மாணவர்களுக்கு பூ கோலமும், படிவம் 4 மற்றும் 5 மாணவர்களுக்கும் ஆசிரியர்களும் பூக்கடை அலங்கரிப்பு போட்டிகளும் நடைப்பெற்றன. அருட்சகோதரர் Mejoery Simon அவர்களும் கலந்துக் கொண்டார்.

*-ஜேன் சந்தனசாமி, கூலிம்*

# நற்செய்திக்காக வாழ்வதில் வாகை சூடுவோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலம் 5-ஆம் ஞாயிறு. இன்றைய திருவழிபாட்டின் வாசகங்களில் வருகின்ற யோபு, புனித பவுல், இயேசு இம்மூவரின் வாழ்வும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக அமைந்திருப்பதை அறிகிறோம்.

முதல் வாசகத்தில் இறை நம்பிக்கையால் சாத்தானின் சோதனைப் போராட்டத்தில் களம் இறங்கிய யோபுவின் துன்பக் கதறலுக்கு கடவுள் பதில் அளிக்கின்றார். மண்ணில் வாழ்வது மனிதருக்குப் போராட்டந்தானே? எனும் யோபுவின் சித்தாந்தம் நமக்கு நல்ல படிப்பினையாக அமைகிறது.

இரண்டாம் வாசகத்தில், இறைநம்பிக்கையுடன் நற்செய்தி அறிவிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டு நற்செய்திக்காக துன்பத்தையும் துணிவுடன் எதிர்கொண்டு, எல்லோருக்கும் எல்லாமுமான புனித பவுலின் வாழ்க்கை நமக்கு சித்தரிக்கப்படுகிறது.

அடுத்து, பல்வேறு பிணிகளால் வருந்திய பலரை குணமாக்கி, அடுத்தடுத்த ஊர்களுக்கும், நலம் தரும் நற்செய்தியை ஆர்வமாய் பறைசாற்றிய இயேசுவின் குணமாக்கும் பணியே சிறந்த நற்செய்திப் பணியாக இருப்பதை அறிகிறோம். நோய்களை குணமாக்கிய ஆண்டவர், பேய்களை ஓட்டிய ஆண்டவர், யோபுவின் துன்பக் கதறலுக்கு பதில் தந்த ஆண்டவர், பவுலின் நற்செய்தி பணியில் துணிவைத் தந்து உடன்பயணித்த ஆண்டவர், நம் மனக்காயங்களுக்கும், உடல் நோய்களுக்கும் நலம் தருவார் என்ற நம்பிக்கை நம்மில் இருக்குமேயானால் நாமும் நலம் பெறுவோம் என்பதில் ஐயமில்லை

மாசற்றவரும், நேர்மையானவருமாய், கடவுளுக்கு அஞ்சித் தீயதை விலக்கி வாழ்ந்த யோபு, சாத்தானால் சோதிக்கப்பட்டபோது தன் உடமைகளையும், உறவுகளையும், உடல் நலத்தினையும் இழந்த நிலையில், மனித வாழ்வை போராட்டமாக நினைத்து, புலம்பினார். கடவுள் அவரது குரலைக் கேட்டு அவருக்கு வாழ்வு தந்தார். யோபு சாத்தானின் சூழ்ச்சிக்குத் துணைபோகவில்லை. இயேசுவுக்காக, நற்செய்திக்காக எல்லாவற்றையும் குப்பையென கருதியவர் புனித பவுல். அவரது படிப்பினையிலும் முன்மாதிரியிலும் பயணிப்பது நமக்கு நல்ல வழிகாட்டலாக அமைகிறது எனலாம்.




**ஆண்டின் பொதுக்காலத்தின் 5-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | யோபு 7: 1-4, 6-7 |
| திரு.பாடல் | 147: 1-2. 3-4. 5-6 |
| 2-ம் வாசகம் | 1 கொரி 9:16-19,22-23 |
| நற்செய்தி | மாற்கு 1: 29-39 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**

நற்செய்தி அறிவிப்பது, தன் மேல் சுமத்தப்பட்ட கடமை என்பதை உணர்ந்த பவுல், நற்செய்தியின் பொருட்டு கிறிஸ்துவுக்கு தன்னை அடிமையாக்கிக் கொண்டு, எல்லோருக்கும் எல்லாமானதை துணிவோடு எடுத்துரைக்கும் புனித பவுலின் வார்த்தைகளை கேட்டு, அவரின் நற்செய்தியால் வரும் ஆசியில் பங்கு பெற முயற்சி செய்வோம்.

*-ஆர்.கே. காஜாங்*